Koviloor Digital Library

ACC·NO·45641
No.5
KOV... 45641 KOV

உ

முருகன் துணை

சென்னை

ஸ்ரீ C. S. தாமோதா முதலியாரின்

பரோபகாரத் தொண்டு.

பரோபகாரம் பலவகைப்படும். ஒவ்வொருவரும் அவரவர் சக்திக்கேற்றவாறு இதில் ஈடுபட்டால், உலகத்தில் துன்பமே இராது. எல்லோரும் இறைவன்பால் அன்பு கொண்டு, நற்கதி அடைவார்கள். வேத நூல்களும், ஞானிகளும், நம்மை நல் வழியில் ஈடுபடுத்த கடுமையான வழிகளையும், சுலபமான வழிகளையும், போதித்தும், போதித்துக் கொண்டும், வருகிறார்கள்.

தெய்வ வழிபாட்டைப் பரவச் செய்யும் பரோபகாரத்தில் ஸ்ரீ முதலியார் ஈடுபட்டுள்ளார். அவரைப்பற்றி தெரிந்து கொள்வதன் மூலம், பரோபகாரத் தொண்டில் ஈடுபட்டுள்ளோர் நன்மை அடையக்கூடும்.

11–10–1894 ல் ரேணுகொண்டாவில் தெய்வபக்தியிலும், சாதுக்களை ரக்ஷிப்பதிலும் சிறந்து விளங்கிய குடும்பத்தில் ஸ்ரீ முதலியார் தோன்றினார். 1908–ம் வருஷ முதல் 1913–ம் வருஷம் வரையில் சென்னை பச்சயப்பன் உயர்தரக் கல்லூரியில் கல்வி பயின்றார். 1914–ம் வருஷ இறுதியில்

Koviloor Digital Library

தபால் இலாகா R. M. S.-ல் வேலைக்கமர்ந்து 1954-ம் வருஷம் வரையில் உழைத்து, நற்பெயருடன் ஓய்வு பெற்றார். வேலையிலிருந்த சமயத்தில், ஈரோட்டில் மஹாஜன உயர்நிலைப் பள்ளி தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. ரா. திம்மப்பய்யரிடம் தமிழ்பயின்றார். பின்பு சென்னையில் திருமுருக கிருபானந்தவாரியாரிடம் கல்வி, கேள்விகள் கற்று, தேர்ச்சி பெற்றார். ஸ்ரீ வாரியாரிடம் குருபக்தி கொண்டிருப்பவர். சென்னையில் உள்ள தேவார-திருப்புகழ்-அருட்பா சபைகளிலும், பஜனைகளிலும், கலந்து, ஈசன்பால் அன்பு காட்டிவருகிறார். சென்னை நகரிலுள்ள சிவனடியார் திருக்கூட்டத்தாரோடு தொண்டை நாட்டுப் பாடல் பெற்ற சிவஸ்தலங்களையும், ஸ்ரீ இளவழகனுருடன் நாயன்மார்கள் பாடல்கள் பெற்ற நடு நாட்டு ஸ்தலங்களையும், சோழ நாட்டு ஸ்தலங்களையும், சேவித்தவர். திருமுருக கிருபானந்த வாரியாரின் திருப்புகழ் சபையாருடன் ஈழ நாட்டு கதிர்காமம் முதலிய ஸ்தலங்களையும் தரிசித்தவர். மலைநாடு, கொங்கு நாடு, துளுவநாடு, வடநாடு இவ்விடங்களிலுள்ள ஸ்தலங்களையும் தாமாகவே சென்று தரிசித்துள்ளார். ஆசார்யாள் குரு பீடங்கள் நான்கையும், ஸ்ரீ ஆதிசங்கரர் அவதார ஸ்தலம் காலடியையும், ரிஷீகேசம் ஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி ஸ்வாமி

Koviloor Digital Library

கள் அவர்களையும், காசி, ராமேஸ்வரம் பத்ரிகாஸ்ரமம் முதலான யாத்திரை ஸ்தலங்களையும், தரிசனம் செய்யத் தவறவில்லை.

தன் வாழ்நாளை பரோபகார தர்மத்தில் அர்ப்பணித்துக் கொள்ளத் தீர்மானித்து, 1950-ம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து இன்றுவரை அநேக தெய்வத் திருநெறி வெளியீடுகள் வெளியிட்டு, பல்லாயிரக்கணக்கில் ஆஸ்திகமக்களுக்கு இலவசமாக வழங்கி, கடவுள் பக்தியைப் பரப்பி வருகிறார். சைவ, வைணவ பேதமின்றியும், தென்மொழி, வடமொழி வித்யாசமின்றியும், முன்னோர்கள் பாடியுள்ள தேவார, திருப்புகழ், திருவருட்பா, திவ்யப் பிரபந்தங்களிலுள்ள மனமுருக்கும் பாடல்களைத் திரட்டி, வெளியீடுகளில் வெளியிட்டு வருகிறார். அநேக அன்பர்கள் விருப்பத்திற்கிணங்க சிறு சிறு நூல்களாகவும் அச்சிட்டு வழங்கி வருகிறார். ஆண்டுக்கு ஒருமுறை, அந்தந்த ஆண்டில் அச்சிட்டவைகளைத் தொகுத்து ஆண்டு மலராகவும் வெளியிட்டு வருகிறார். இப்பணியில் அவர் உற்சாகம்குன்றாமல் இருக்க பல அன்பர்கள் அவருக்கு நன்கொடை அனுப்பி உதவி புரிந்து வருகிறார்கள். இப்பணியில் அவருக்கு எவ்வளவு சிரமம் இருந்துவரும் என்பதை நேயர்களே ஊகித்துக் கொள்ளலாம். தன் ஆயுட்காலம் முழுமையிலும் இப்பணியை

Koviloor Digital Library

நடத்துவதில் உறுதி பூண்டிருக்கிறார். இந்தப் பரோபகாரத்தினால் எவ்வளவு பயன் ஏற்படுமென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அவருக்கு ஒரு புதல்வனும், நான்கு புத்திரிகளும் உளர். அவரது தாயார் 1935-ம் ஆண்டிலும், தந்தையார் 1943-ம் ஆண்டிலும், துணைவியார் 1940-ம் ஆண்டிலும், முருகன் திருவடி அடைந்தனர். காமகோடிபீடம் ஸ்ரீ ஜகத்குரு அவர்களிடம் பக்தி கொண்டவர். ஸ்ரீ முதலியார் பல்லாண்டுகள் அரோக திடகாத்திரத்துடன் வாழ்ந்து, அவர் தொண்டில் மேன் மேலும் சிரேயஸ் பெற அருள் புரிய இறைவனை வேண்டுகிறோம். (அவர் விலாசம்:- C. S. தாமோதர முதலியார், 22, ஜெனரல்சாமி நாயக்கன் தெரு, திருவல்லிகேணி, சென்னை 5-).

இலவச வெளியீடுகள் வேண்டுவோர் தபால் ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

"பெருமான் புகழே பெருக நினைந்து
திருவாம் பாடல்களைத் தேர்ந்தே-ஒருவாதிங்
கச்சிட்டுலகோர்க் கனிக்கும்தா மோதரனுர்க்
கிச்சகத்தில் உண்டோ எதிர்"

தணிகைமணி, சென்னை.

ஸ்ரீ காமகோடி 12-2-57 ல் பதிப்பானது

நவஜீவன பிரஸ் 13, வால் டாக்ஸ் ரோடு, மதராஸ்-3.

KOVILOOR ... 1704